# குளித்தலை நகராட்சி

28.09.2018.ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்–01. தமிழ்நாடு அரசு நிதி(படிகள்) துறை, அரசு ஆணை எண்.313, நாள்–18.09.2018.ன்படி, அகவிலைப்படி 7%.லிருந்து 9%.ஆகவும், அரசாணை(நிலை) எண்.321, நாள்–24.09.2018.ன்படி 142%.லிருந்து 148%.ஆகவும் உயர்த்தப்பட்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.2987/2018/சி1)

பொருள்–02. குளித்தலை நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 2018–2019.ன்கீழ், நகரில் அடிப்படை கட்டமைப்பு பணிகளை மேம்பாடு செய்வதற்காக, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை(MA2) அரசாணை எண்.(MS)82, நாள்–23.08.2018.ன்படி, கீழ்க்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணி | திட்டப்பணியின் மதிப்பு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி மற்றும் மருதூர் பேரூராட்சிக்கு நகராட்சிக்கு சொந்தமான சத்தியமங்கலம் உரக்கிடங்கில் (சர்வே எண்.104/2, 105/3ஏ) தினமும் 20KLD சுத்திகரிப்பு திறன் உள்ள கழிவுநீர் கசடு சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல். | 385.00 |

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). திட்ட பிரேரனையை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்பிவைக்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1387/2018/இ1)

பொருள்–03. குளித்தலை நகராட்சி பொறியியல் பிரிவில் அலுவலக கோப்புகள் பாதுகாப்பாக வைப்பதற்கு ஒரு இரும்பு பீரோ வாங்கவேண்டியது அவசியமாக உள்ளது. மேற்படி 6 அடி உயரத்திலான 16–kg தரத்தில் இரும்பு பீரோ வாங்க ரூ.10500/– உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.2843/2018/இ1)

பொருள்–04. குளித்தலை நகராட்சிப் பகுதியில் 2018–2019.ஆம் ஆண்டிற்கான தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு, தெருவிளக்கு உபகரணங்கள் சப்ளைசெய்தல் பணிக்கு, ரூ.9.50 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற தீர்மானம் எண்.158, நாள்–23.08.2018.ல் அனுமதி பெற்று, 04.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சியில் 2018–2019.ஆம் ஆண்டிற்கான தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு தெருவிளக்கு உபகரணங்கள் சப்ளை செய்தல். | M/s.சாய் டிரேடர்ஸ்,<br>55, புனிதாகாம்ப்ளக்ஸ்,<br>குளித்தலை. | 0.20 % குறைவு |
| | | M/s.ராயல் எலக்ட்ரிக்கல்ஸ்,<br>55A-1, புதுக்கோர்ட்தெரு,<br>குளித்தலை. | 8.00 % அதிகம் |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 0.20% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.சாய் டிரேடர்ஸ் நிறுவன ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி, ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2296/2018/இ1)

..2..

பொருள்– 05. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக முதிர்வு கொசுக்களை ஒழிப்பதற்கும், டெங்கு தடுப்பு நடவடிக்கையாக குடியிருப்பு வீடுகளில் புகை மருந்து அடிப்பதற்கு கை புகைபோக்கி இயந்திரம் வாங்குவதற்கு மன்ற தீர்மானம் எண்.162, நாள்–23.08.2018.ல் மன்றம் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்காணும் தீர்மானத்திற்கிணங்க கை புகைபோக்கி இயந்திரம் வாங்குவதற்கு 25.09.2018.ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண். | நிறுவனத்தின் பெயர் | புகைபோக்கி இயந்திரம் 1.ன் விலை |
|---|---|---|
| 1) | S.N.ENTERPRISES, 1G,RAJAJI AVENUE, VALASARAVAKKAM, CHENNAI-87. | ரூ.43,000/– |
| 2) | SYSTEMS ENGINEERING, 1,ANNAI SATHYANAGAR MAINROAD, RAMAPURAM, CHENNAI-89. | ரூ.42,000/– |

அலுவலக குறிப்பு– வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் Systems Engineering, Chennai-89 என்பவரின் ஒப்பந்தப்புள்ளியானது மற்ற ஒப்பந்தப்புள்ளியை காட்டிலும், குறைவான ஒப்பந்தப்புள்ளி ஏற்கலாம்.
(ந.க.எண்.2415/2018/எச்1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளின் பூங்கா பகுதிகளை சுத்தம் செய்ய வேண்டி உள்ளது. காவேரிநகர், பெரியார்நகர், பாலாஜிநகர் விளையாட்டு மைதானம் உள்ளிட்ட பூங்காவில் உள்ள முட்செடிகள் மற்றும் சீமைகருவேல மரங்களை JCB மூலம் அகற்ற ரூ.34,000/– உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.2499/2018/இ1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட புதுக்கோர்ட்தெருவில் வசிக்கும் திரு.சையத்முஸ்தபா, த/பெ.சையத்அலி என்பவர், நகராட்சி எல்லைக்குள் செல்லும் பொதுப்பணித்துறை வாய்க்கால்களை (தற்போது வடிகால்) பராமரிப்பது தொடர்பாக, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.WP(MD) No.5556/2013.ல், நகராட்சி ஆணையரை மூன்றாம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் மூன்றுமுறை எதிர்வாதுரை நீதிமன்றத்தில் நகராட்சியால் தாக்கல் செய்யப் பட்டுள்ளது. எதிர்வாதுரை தாக்கல் செய்ததற்கு, அரசு கூடுதல் வழக்கறிஞர் கட்டணமாக ரூ.8000/–ஐ, வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1033/2013/பி2)

பொருள்– 08. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக முதிர்வு கொசுக்களை ஒழிப்பதற்கும், டெங்கு தடுப்பு பணிக்காக புகை மருந்து அடிப்பதற்கு புகைபோக்கி இயந்திரத்தை 2018–2019 வருடாந்திர பழுது நீக்கம் செய்வதற்கு மன்ற தீர்மானம் எண்.141, நாள்–09.08.2018.ல் மன்றம் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்காணும் தீர்மானத்திற்கு இணங்க, புகைபோக்கி இயந்திரத்தை 2018–2019 வருடாந்திர பழுது நீக்கம் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி 05.09.2018 வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | வருடாந்திர பழுது நீக்கம் செய்வதற்கு 1 புகைபோக்கி இயந்திரத்திற்கு | |
|---|---|---|---|
| | | 1 பெரிய புகைபோக்கி இயந்திரம் | 1 சிறிய புகைபோக்கி இயந்திரம் |
| 1) | SYSTEM ENGINEERING, 1,ANNAI SATHYANAGAR MAINROAD, RAMAPURAM, CHENNAI – 600 089. | Rs.51,000/- | Rs.15,000/- |
| 2) | S.N.ENTERPRISES, 1G,RAJAJI AVENUE, VALASARVAKKAM, CHENNAI-89 | Rs.53,000/- | Rs.16,000/- |

அலுவலக குறிப்பு– வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் Systems Engineering, Chennai-89 என்பவரின் ஒப்பந்தப்புள்ளியானது மற்ற ஒப்பந்தப்புள்ளியை காட்டிலும் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே, குறைவான ஒப்பந்தப்புள்ளியை அளித்துள்ள Systems Engineering, Chennai-89 என்ற நிறுவனத்திற்கு வருடாந்திர பழுதுநீக்கம் செய்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.கஎண்.2389/2018/எச்1)

பொருள்– 09. குளித்தலை நகராட்சி ரயில்வே ஸ்டேசன்ரோடு வார்டு 19.ல் புதிய மின்மாற்றி அமைத்து உள்ளதால், தெருவிளக்குகளுக்கு ஒரு புதிய ஒரு முனை மின் இணைப்பு பெறவேண்டி உள்ளது. அதற்குரிய கட்டணம் ரூ.1609/–ஐ, தமிழ்நாடு மின்சார வாரியம், குளித்தலைக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3). அவசர அவசியம் கருதி செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2701/2018/இ1)

பொருள்– 10. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN-47-AS-5098 மற்றும் TN-47-AS-5109 என்ற வாகனங்களுக்கு 2 டயர்கள் வீதம் நான்கு டயர்கள் வாங்குவதற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.101, நாள்–15.05.2018.ல் அனுமதி அளித்து உள்ளது. அதன்படி குறைந்த விலைப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | TN-47-AS-5098 | | | | TN-47-AS-5109 | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) | S.B. Tyres, குளித்தலை. | = | 5600.00 | 1) | S.B. Tyres, குளித்தலை. | = | 5600.00 |
| 2) | SS Tyres, குளித்தலை. | = | 5200.00 | 2) | SS Tyres, குளித்தலை. | = | 5200.00 |

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள SS Tyres, குளித்தலை விலைப்புள்ளியை ஏற்கலாம்.
(ந.க.எண்.1013/2018/எச்1)

பொருள்– 11. குளித்தலை நகராட்சி பெரியார்நகர் தலைமை நீரேற்று நிலையத்தில் மின்அழுத்தம் காரணமாக மீட்டர் பழுது பட்டுவிட்டது. அவசர அவசியம் கருதி, புதிய மின் மீட்டர் பொருத்துவதற்கான கட்டணம் ரூ.1422/–ஐ, தமிழ்நாடு மின்சார வாரியம், குளித்தலைக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3). அவசர அவசியம் கருதி செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2862/2018/இ1)

பொருள்– 12. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு துப்புரவு பணியாளர்களுக்கு 2018–2019.ஆம் ஆண்டிற்கான தளவாட சாமான்கள், மண்வெட்டி–75(பிடியுடன்), 4.பல் கொக்கி–75(பிடியுடன்), கடப்பாறை.8, அலுமினிய கூடை–150, இரும்பு சட்டி–75, அரிவாள்–20, கூட்டுமார்–100, மூங்கில் கூடை–30, தென்னைமாறு–50, சாக்கடை சுத்தம் செய்யும் அகப்பை–100 ஆகிய தளவாட சாமான்கள் வாங்குவதற்கு மன்ற தீர்மானம் எண்.164, நாள்–23.08.2018.ல் அனுமதி வழங்கியுள்ளது. அதன்பேரில், 25.09.2018.ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண். | தளவாட சாமான்கள் | ஹரிணி ஏஜென்சீஸ். 1.எண்ணம்விலைரூபாயில் | அப்துல்லா ஏஜென்சீஸ், 1.எண்ணம்விலை ரூபாயில் |
|---|---|---|---|
| 1) | மண்வெட்டி | 470/– | 478/– |
| 2) | நான்குபல் கொக்கி பிடியுடன் | 475/– | 485/– |
| 3) | கடப்பாறை | 880/– | 900/– |
| 4) | அலுமினிய கூடை (அலுமினியம்) | 480/– | 500/– |
| 5) | இரும்பு சட்டி | 380/– | 390/– |
| 6) | அரிவாள் (பெரியது) | 460/– | 480/– |
| 7) | கூட்டுமார் | 350/– | 400/– |
| 8) | மூங்கில் கூடை | 385/– | 410/– |
| 9) | தென்னைமாறு (விளக்கமாறு) | 50/– | 60/– |
| 10) | சாக்கடைசுத்தம்செய்யும் அகப்பை | 310/– | 330/– |

அலுவலக குறிப்பு– வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஹரிணி ஏஜென்சீஸ், நாமக்கல் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
(ந.க.எண்.2634/2018/எச்1)

பொருள்– 13. குளித்தலை நகராட்சிப் பகுதியில் தூய்மை இந்திய திட்டம் சிறப்பு திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 2018–2019.ல், முதன்மை சேகரிப்பு பணிக்கான பேட்டரி வாகனங்கள் 3 சப்ளை செய்தல் பணிக்கு, ரூ.5.40 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.22866/பி3/2018, நாள்–23.08.2018 செயல்முறைகளில் நிர்வாக அனுமதி வழங்கியதன்படி, மன்ற தீர்மானம் எண்.161, நாள்–23.08.2018.ல் அனுமதி பெற்று 10.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுசதவீதம் |
|---|---|---|---|
| 1) | முதன்மை சேகரிப்பு பணிக்கான பேட்டரியில் இயங்கும் வாகனங்கள் 3 சப்ளை செய்தல் | M/s.Encon Egnineers, Coimbatore | 0.28 % குறைவு |
| | | Priyam Enterprise, Chennai | தொழில்நுட்ப தகுதியற்றதாக உள்ளது. |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1.ல் ஆன தகுதியான ஒரு ஒப்பந்தப்புள்ளி ஆகிய, மதிப்பீட்டிற்கு 0.28% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.Encon Egnineers நிறுவன தொழில்நுட்ப தகுதியுடைய ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2). அவசர அவசியம் கருதி, ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1389/2018/இ1)

பொருள்– 14. குளித்தலை நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டம் சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–2019.ல் ஜெய்மகால் அவென்யூ பூங்காவில் நுண் உரக்கிடங்கு மற்றும் சுற்றுசுவர்கள் அமைத்தல் பணிக்கு ரூ.35.24 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.22866/பி3/2018, நாள்–23.08.2018 செயல்முறைகளில் நிர்வாக அனுமதி வழங்கியதன்படி, மன்ற தீர்மான எண்.161, நாள்–23.08.2018.ல் அனுமதிபெற்று 10.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுசதவீதம் |
|---|---|---|---|
| 1) | வார்டு எண்.14, நகர அளவை எண்.53 பகுதியிலான ஜெய்மகால் அவென்யூ பூங்காவில் 2TDP கொள்ளளவுகளின்படி நுண் உரக்கிடங்கு மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் | திரு.R.N.வெங்கடாஜலபதி, குளித்தலை | 4.72 % அதிகம் |
| | | திரு.M.மகாலிங்கம், கிருஷ்ணராயபுரம் | 7.54 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 4.86% கூடுதலாக இருந்த காரணத்தினால், ஒப்பந்தப்புள்ளியை குறைப்புசெய்து கொடுக்கும்படி (Negotiation) குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.R.N.வெங்கடாஜலபதி அவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளியை குறைத்து வழங்குமாறு 27.09.2018 அன்று இவ்வலுவலகத்தில் இருந்து கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி, ஒப்பந்ததாரர் திரு.R.N.வெங்கடாஜலபதி, வ.எண்.18–ஐ, ரூ.700/– என்ற விகிதத்தில் செய்ய சம்மதித்து விலை குறைவு கடிதம் வழங்கினார். அதன்படி ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில், மதிப்பீட்டுக்கு 4.72% கூடுதலாக இருந்தது. கட்டுமான பொருட்கள், சாலை மற்றும் கட்டிட பணியாளர்கள் கூலி ஆகியவை விலையேற்றம் காரணமாக இனி குறைக்க இயலாது என இறுதிசெய்து பதில் கடிதம் வழங்கியுள்ளார். எனவே, மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் வழங்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). நகராட்சி நிர்வாகம், பொறியாளர் கையேடு தொகுதி–I, பத்தி 2.7.2 பக்கம் எண்.9.ல், பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு விகிதத்திற்கு 5% வரை கூடுதலாக முதல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பிலேயே வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கட்டுமான பொருட்கள் விலையேற்றத்தினாலும், கட்டுமான தொழிலாளர்கள் கூலியேற்றத்தினாலும், மதிப்பீட்டிற்கு 4.72% கூடுதலாக வழங்கியுள்ள திரு.R.N.வெங்கடாஜலபதி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1389/2018/இ1)

பொருள்– 15. குளித்தலை நகராட்சியின் குடிநீர் பிரிவு பணிக்கான ஈப்பு வாகனம் TN-47-X-3173 பொலிரோ (BOLERO) 2011.ஆம் ஆண்டு வாங்கப்பட்டது. மேற்படி ஈப்பு குடிநீர் பிரிவு பயன்பாட்டிற்காக 300000 (மூன்று லட்சம்) கிலோ மீட்டர் வரை ஓடியுள்ளது. எனவே, புதிய ஈப்பு ஒன்று வாங்க உத்தேச செலவினம் ரூ.7,10,000/– மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.

2). செலவினத்தை குடிநீர் நிதியில் அல்லது திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2702/2018/இ1)

பொருள்– 16. குளித்தலை நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டம் சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–2019.ல் அண்ணாநகர் பூங்காவில் நுண் உரக்கிடங்கு மற்றும் சுற்றுசுவர் அமைத்தல் பணிக்கு ரூ.35.24 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.22866/பி3/2018, நாள்–23.08.2018 செயல்முறையில் நிர்வாக அனுமதி வழங்கியதன்படி, மன்ற தீர்மான எண்.161, நாள்–23.08.2018.ல் அனுமதிபெற்று 10.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுசதவீதம் |
|---|---|---|---|
| 1) | வார்டு எண்.24, நகர அளவை எண்.128 பகுதியில் அண்ணாநகர் பூங்காவில் 2TDP கொள்ளளவுகளின்படி நுண் உரக்கிடங்கு மற்றும் சுற்றுச்சுவர்கள் அமைத்தல் | திரு.M.மகாலிங்கம், கிருஷ்ணராயபுரம் | 4.52 % அதிகம் |
| | | திரு.R.N.வெங்கடாஜலபதி, குளித்தலை | 7.60 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 4.64% கூடுதலாக இருந்த காரணத்தினால், ஒப்பந்தப்புள்ளியை குறைப்புசெய்து கொடுக்கும்படி (Negotiation) குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.M.மகாலிங்கம், ஒப்பந்ததாரர் அவர்களுக்கு 4.64% அதிகமாக உள்ள ஒப்பந்தப்புள்ளியை குறைத்து வழங்குமாறு 27.09.2018 அன்று இவ்வலுவலகத்தில் இருந்து கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி, ஒப்பந்ததாரர் திரு.M.மகாலிங்கம், ஒப்பந்ததாரர், வ.எண்.29–ஐ, ரூ.900/– என்ற விகிதத்தில் செய்ய சம்மதித்து விலை குறைவு கடிதம் வழங்கினார். அதன்படி ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில், மதிப்பீட்டுக்கு 4.52% கூடுதலாக இருந்தது. கட்டுமான பொருட்கள், சாலை மற்றும் கட்டிட பணியாளர்கள் கூலி ஆகியவை விலையேற்றம் காரணமாக இனி குறைக்க இயலாது என இறுதிசெய்து பதில் கடிதம் வழங்கியுள்ளார். எனவே, மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் வழங்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). நகராட்சி நிர்வாகம், பொறியாளர் கையேடு தொகுதி–I, பத்தி 2.7.2 பக்கம் எண்.9.ல், பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு விகிதத்திற்கு 5% வரை கூடுதலாக முதல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பிலேயே வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கட்டுமான பொருட்கள் விலையேற்றத்தினாலும், கட்டுமான தொழிலாளர்கள் கூலியேற்றத்தினாலும், மதிப்பீட்டிற்கு 4.52% கூடுதலாக வழங்கியுள்ள திரு.M.மகாலிங்கம், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1389/2018/இ1)

பொருள்– 17. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு டெங்கு தடுப்பு நடவடிக்கையாக பொது இடங்கள், பொது கழிப்பிடங்கள் மற்றும் பேருந்து நிலையம், ஒவ்வொரு குடியிருப்பு வீடுகளில் உள்ள தொட்டிகளில் கிருமி நீக்கம் செய்வதற்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி, பிளீச்சிங் பவுடர் 4–டன், சுண்ணாம்புத்தூள் 8–டன், ஆசிட் 500–லிட்டர் மற்றும் பினாயில்–500 லிட்டர், லெமன் கிராஸ் பினாயில் 10–லிட்டர் வாங்குவதற்கு மன்ற தீர்மானம் எண்.163, நாள்–23.08.2018.ல் அனுமதி வழங்கியுள்ளது. அதன்பேரில், 25.09.2018.ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண். | கிருமி நாசிகள் | ஹரிணி ஏஜென்சீஸ். 1 கிலோ/லிட்டர் விலை ரூபாய் | அப்துல்லா ஏஜென்சீஸ், 1 கிலோ/லிட்டர் விலை ரூபாய் |
|---|---|---|---|
| 1) | பிளீச்சிங் பவுடர் | 48/– | 50/– |
| 2) | சுண்ணாம்புத்தூள் | 11/– | 13/– |
| 3) | ஆசிட் | 30/– | 32/– |
| 4) | பினாயில் | 48/– | 51/– |
| 5) | லெமன் கிராஸ் பினாயில் | 1800/– | 2000/– |

அலுவலக குறிப்பு– வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஹரிணி ஏஜென்சீஸ், நாமக்கல் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

(ந.க.எண்.2633/2018/எச்1)

..6..

பொருள்– 18. குளித்தலை நகராட்சி குடிநீர் விநியோக திட்ட விதி 1920.ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்ட பிரிவுகள் 309, 310 உட்பிரிவு 2.ல் திருத்தங்கள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டதன் விபரம் பொதுமக்கள் ஆலோசனை மற்றும் ஆட்சேபணைகள் 30.தினங்களில் சமர்ப்பிக்க தெரிவித்து தினத்தந்தி நாளிதழில் 13.08.2018.ல் விளம்பரம் வெளியிடப்பட்டது. 15.08.2018.ஆம் தேதியில் பெறப்பட்ட பட்டியலின்படி விளம்பர கட்டணம் ரூ.22176/–ஐ, வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று குடிநீர் நிதியில் இருந்து செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2130/2018/இ1)

பொருள்– 19. குளித்தலை நகராட்சியில் தூய்மை இந்திய திட்டம் சிறப்பு திடக்கழிவு மேலாண்மைத் திட்ட பணிகள் (2018–2019.க்கு) 10.09.2018.ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை, அக்கார்ட் விளம்பர ஏஜென்சீஸ், சென்னை மூலம் கீழ்க்கண்ட விபரப்படி விளம்பரம் செய்யப்பட்டது.

| வ. எண். | செய்தித்தாள் | பதிப்பு | வெளியிடப்பட் நாள் | கட்டணத் தொகை |
|---|---|---|---|---|
| 1) | தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் | தென்னிந்தியா | 28.08.2018 | ரூ. 112500.00 |
| 2) | மாலை முரசு | தமிழ்நாடு | 28.08.2018 | ரூ. 20000.00 |
| | | | CGST | ரூ. 3312.50 |
| | | | SGST | ரூ. 3312.50 |
| | | | மொத்தம் | ரூ. 139125.00 |

ரூபாய் ஒரு லட்சத்து முப்பத்து ஒன்பது ஆயிரத்து நூற்று இருபத்தி ஐந்து மட்டும் அக்கார்ட் விளம்பர நிறுவனத்திற்குரிய விளம்பர கட்டணம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1389/2018/இ1)

பொருள்– 20. இந்நகராட்சியில் பணிபுரியும் வெளிப்புற பணியாளர்களுக்கு தொடர் மழைக்காலங்களில் பொதுமக்களின் அத்தியாவசிய பணிகள் தொய்வின்றி நடைபெற மழைக்கோட் (Rain Coat) வாங்கி வழங்கவும் இதனை தேசிய சிறுதொழில் கழகம் (லிட்) மூலம் நேரடியாக பெற்று பணியாளர்களுக்கு வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.75,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.3028/2018/எச்1)

பொருள்– 21. இந்நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், அலுவலக உதவியாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் மின்கம்பி பணியாளர்களுக்கு 2018–2019 ஆண்டுக்கான சீருடைகள் TamilNadu Textile Corporation, Ltd., Coimbatore என்ற அரசு சார்பு நிறுவனத்திடம் பெற்று பணியாளர்களுக்கு வழங்குவதற்கும் மற்றும் தையல்கூலி வாங்கி வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.3027/2018/எச்1)

*******

**குளித்தலை நகராட்சி**

28.09.2018.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 179 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 180 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 3 | 3 | 181 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 4 | 4 | 182 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 5 | 5 | 183 | ஏற்கப்பட்டது. |
| 6 | 6 | 184 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 7 | 7 | 185 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 8 | 8 | 186 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 9 | 9 | 187 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 10 | 10 | 188 | ஏற்கப்பட்டது. |
| 11 | 11 | 189 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 12 | 12 | 190 | ஏற்கப்பட்டது. |
| 13 | 13 | 191 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 14 | 14 | 192 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 15 | 15 | 193 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 16 | 16 | 194 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 17 | 17 | 195 | ஏற்கப்பட்டது. |
| 18 | 18 | 196 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 19 | 19 | 197 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 20 | 20 | 198 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 21 | 21 | 199 | அனுமதி வழங்கப்பட்டது. |

ஒம்/— அ.வ.சையத் முஸ்தபா கமால்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.